# 05-12-2024 செய்தி

## மீட்டெடுக்கப்படுமா பொருளாதார வளர்ச்சி விகிதம்?

- இந்தியாவின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கக்கூடிய மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் (Gross Domestic Growth) 5.4% ஆக குறைந்திருப்பது கவலையளிக்கிறது.
- 2024-2025ஆம் நிதியாண்டின் முதல் கால் கால் பகுதியில் இது 6.7 % ஆக இருந்தது. இரண்டாம் கால் பகுதியில் ஏற்பட்டுள்ள இந்தச் சரிவு, கடந்த 7 கால் ஆண்டுகளிலேயே மிகவும் குறைவு. கூடவே, மொத்த மதிப்புச் சேர்ப்பும் (Gross Values Added) முன்பைவிடக் குறைந்திருப்பது, நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் என வல்லுநர்கள் கூறுகின்றனர்.
- ஒரு நாட்டில் குறிப்பிட்ட கால அளவில் உற்பத்தியாகும் பொருள்கள், சேவைகள் ஆகியவற்றின் பணமதிப்பு 'மொத்த உள்நாட்டு உற்பத்தி' எனப்படுகிறது.
- அந்நாட்டில் நிகழும் கல்வித் துறை சார்ந்த சேவைகள், பாதுகாப்புத் துறையால் வழங்கப்படும் சேவை போன்றவற்றின் மதிப்பும் இதில் சேர்க்கப்படும்.
- நாட்டினுடைய பொருளாதார நிலையின் குறியீடாக மொத்த உள்நாட்டு உற்பத்தி கொள்ளப்படுகிறது.
- இது அதிகரித்தால் பொருளாதார வளர்ச்சியும் நல்ல நிலையில் உள்ளது எனக் கூறலாம்.
- மொத்த உற்பத்திக்குத் தேவையான உள்ளீடு பொருள்களின் மதிப்பைக் கழித்து "மொத்த மதிப்புச் சேர்ப்பு" கணக்கிடப்படுகிறது. பொருளாதார நிலையைத் தெரிவிக்கும் இந்த இரண்டு கூறுகளின் வளர்ச்சி விகிதத்தைக் கணக்கெடுப்பது தேசியப் புள்ளியியல் அலுவலகத்தின் பணியாகும்.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியைத் தாங்கிப்பிடிக்கும் உற்பத்தித் துறையின் வளர்ச்சி விகிதம் கடந்த நிதி ஆண்டின் இதே காலக்கட்டத்தில் 14.3% ஆக இருந்தது. தற்போது 2.2% ஆக உள்ளது.
- கட்டுமானத் துறை, சுரங்கம், குவாரிச் செயல்பாடுகளிலும் வளர்ச்சி விகிதம் குறைந்திருக்கிறது. ஆறுதல் அளிக்கும் வகையில், வேளாண்மைத் துறையின் வளர்ச்சி விகிதம் 1.7% லிருந்து 3.5% ஆக அதிகரித்துள்ளது.
- சேவைத் துறையிலும் தகவல்தொடர்புத் துறையிலும் இதுபோல வளர்ச்சி காணப்படுவது நம்பிக்கை அளிப்பதாக உள்ளது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தி ஒட்டுமொத்தமாகக் குறைந்ததற்கு நகர்ப்புற நுகர்வு மந்தநிலையை அடைந்தது முதன்மைக் காரணமாகக் கூறப்படுகிறது.
- உண்மையான வருவாயில் (பணவீக்கத்துக்கு ஈடுகொடுக்கும் விதத்திலான தனிநபர் மற்றும் நாட்டின் வருவாய்) ஏற்பட்ட தேக்கமும் அதிக வட்டி விகிதங்களும் நுகர்வைக் குறைத்தன.
- விலைகள் உயர்ந்ததாலும் தேவை குறைந்ததாலும் உற்பத்தித் துறையும் பாதிக்கப்பட்டது. 6.21%ஆக இருக்கும் தற்போதைய பணவீக்கம் இன்னொரு முக்கியக் காரணி.
- இந்திய ரிசர்வ் வங்கி, நிகழும் 2024 – 2025 நிதியாண்டுக்கான வளர்ச்சி விகித இலக்காக 7.2%ஐ நிர்ணயித்திருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தி குறைந்துள்ள சூழலில், அந்த இலக்கை அடைவது கடினமான பயணமாகவே இருக்கும் எனக் கருதப்படுகிறது.
- அளவுக்கு அதிகமான தனியார்மயமாக்கம், போக்குவரத்துத் துறையிலும் தொழில் துறையிலும் விபத்துகளால் ஏற்படும் பொருளாதார இழப்பு, மனிதவள இழப்பு, அண்டை நாடுகளுடனான உறவில் ஏற்படும் உரசல்கள், சில மாநிலங்களில் நிலவும் அரசியல் நிலைத்தன்மை அற்ற சூழல், சட்டம் – ஒழுங்கு சீர்கேடு போன்றவையும், காலநிலை மாற்றத்தின் விளைவுகளும் உள்நாட்டு உற்பத்தியோடு நெருங்கிய தொடர்புடையவை.
- அதிக முதலீடுகளை ஈர்ப்பது, தொழிலாளர் எண்ணிக்கையையும் அவர்களின் உற்பத்தித்திறனையும் அதிகரித்தல், பல்வேறு துறைகளில் ஏற்றுமதியை அதிகரித்தல், அரசுக் கொள்கைகளில் நெகிழ்வான மாற்றங்களைச் செய்தல் போன்ற தீர்வுகள் முன்வைக்கப்படுகின்றன. மாநில அரசுகளையும் பங்களிப்பாளர்களாகக் கொண்டு மத்திய அரசு ஏறுமுகமான பொருளாதார வளர்ச்சியை மீட்டெடுக்க வேண்டும்.

## குள்ள நரிகள் பாதுகாப்புக்காக சேலத்தில் சிறப்பு மையம்

- 'வங்கு நரி' எனப்படும் குள்ள நரிகள் வேட்டையாடப்படுவதை தடுத்து, அதை பாதுகாப்பதற்கான சிறப்பு மையம், சேலத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் பெரும்பாலான காப்புக் காடுகளில், நரிகள் வாழ்கின்றன. இதில் வங்கு – நரி எனப்படும் குள்ள நரி மிக குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளன. குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் இவ்வகை நரிகள் பரவலாக காணப்படுகின்றன.
- இங்கு வாழப்பாடி உள்ளிட்ட சில தாலுகாக்களில், பொங்கல் பண்டிகையின் போது, குள்ள நரியை பிடித்து வழிபாடு செய்கின்றனர்.
- இவ்வாறு பிடிக்கப்படும் குள்ள நரிகள், மீண்டும் அதன் இனத்தில் சேர முடியாமல், அழியும் நிலை ஏற்படுகிறது.
- ஒவ்வொரு ஆண்டும் மக்கள் இவ்வாறு செய்வதால், குள்ள நரிகள் இனமே அழிவின் விளிம்புக்கு தள்ளப்படுகிறது.
- இதற்காக நாட்டிலேயே முதல் முறையாக, சேலத்தில் குள்ள நரிகள் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வுக்கான சிறப்பு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.